8th August 1960]

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : நாகப்பட்டினம், தூத்துக்குடி, கன்னியாகுமரி முதலிய இடங்களில் ஆரம்பிக்க உத்தேசம். அதற்கு 6,400 பவுன் செலவில் மெஷினரிகள் வரவழைக்கப்பட்டிருக்கின்றன.

SRI A. GOVINDASAMY : இந்தத் தொழிற்சாலை நிறுவுவதற்கு மத்திய சர்க்கார் ஏதாவது நிதி தர ஒத்துக் கொண்டிருக்கிறார்களா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : தகவல் இல்லை.

Andhra river waters for Madras

MR. SPEAKER : Questions Nos. 25 and 26 will be taken up together.

* 25 Q.— SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

(அ) 1960-ம் ஆண்டு எப்ரல் மாதம் 6-ம் தேதியன்று 134-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலைபொட்டி கிருஷ்ணா, கோதாவரி, பெண்ணாறு ஆகிய ஆறுகளின் உபரித் தண்ணீரை நம் மாநிலத்திற்குக் கொண்டுவருவதைக் குறித்து ஆந்திர சர்க்காருடன் விவாதிக்கப்பட்டதா ?

(ஆ) அப்படியாயின், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.

(b) Does not arise.

* 26 Q.—SRI N. K. PALANISAMI, and SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether there has been any contract recently with the Andhra State regarding bringing of Andhra river waters to Madras; and

(b) if so, the details of the same?

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.

(b) Does not arise.

SRI M. KALYANASUNDARAM : கோதாவரி, கிருஷ்ணா ஆகிய நதிகளில் இருக்கக்கூடிய உபரி ஜலத்தை சென்னை ராஜ்யத்திற்குக் கொண்டுவரக்கூடிய திட்டம் ஏதாவது நமது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறதா ? அப்படியானால் அந்தத் திட்டத்தின் விவரம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN எற்கெனவே கிருஷ்ணா, பெண்ணாறு திட்டம் இந்த சர்க்காரால் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. மொழி வழி மாகாணம் வந்தபிறகு மேலும் கோதாவரி, கிருஷ்ணா